## பேயாழ்வார் அருளிச் செய்த
# மூன்றாம் திருவந்தாதி

---

## மூன்றாம் திருவந்தாதி தனியன்

### குருகை காவலப்பன் அருளிச் செய்தது

சீராரும் மாடத் திருக்கோவலூர் அதனுள் *
காரார் கருமுகிலைக் காணப் புக்கு * - ஓராத்
திருக்கண்டேன் என்று உரைத்த சீரான் கழலே *
உரைக் கண்டாய் நெஞ்சே! உகந்து

---

## பேயாழ்வார் அருளிச் செய்த
## மூன்றாம் திருவந்தாதி

2282 * திருக்கண்டேன் * பொன் மேனி கண்டேன் * திகழும்
அருக்கனணி நிறமும் கண்டேன் ** - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் * புரி சங்கம் கைக்கண்டேன் *
என்னாழி வண்ணன் பால் இன்று 1

2283 இன்றே கழல் கண்டேன் * ஏழ் பிறப்பும் யான் அறுத்தேன் *
பொன் தோய் வரை மார்பில் பூந்துழாய் ** - அன்று
திருக்கண்டு கொண்ட * திருமாலே! * உன்னை
மருக்கண்டு கொண்டென் மனம் 2

2284 மனத்துள்ளான் * மாகடல் நீர் உள்ளான் * மலராள்
தனத்துள்ளான் * தண்துழாய் மார்பன் ** - சினத்துச்
செருநருகச் செற்று உகந்த * தேங்கோத வண்ணன் *
வரு நரகம் தீர்க்கும் மருந்து 3

2285 மருந்தும் பொருளும் * அமுதமும் தானே *
திருந்திய செங்கண்மால் ஆங்கே ** - பொருந்தியும்[1]
நின்று உலகம் உண்டு உமிழ்ந்தும் * நீர் ஏற்றும் மூவடியால் *
அன்று உலகம் தாயோன் அடி 4

2286 அடி வண்ணம் தாமரை * அன்று உலகம் தாயோன் *
படி வண்ணம் பார்க்கடல்[2] நீர் வண்ணம் ** - முடி வண்ணம்

---

[1] பொருந்திய
[2] பாற்கடல்

ஓராழி வெய்யோன் * ஒளியும் அஃதன்றே *
ஆராழி கொண்டாற்கு அழகு 5

2287 அழகன்றே ஆழியாற்கு * ஆழி நீர் வண்ணம் *
அழகன்றே அண்டங்கடத்தல் ** - அழகன்றே
அங்கை நீர் ஏற்றாற்கு * அலர் மேலோன் கால் கழுவ *
கங்கை நீர் கான்ற கழல் 6

2288 கழல் தொழுதும் வா நெஞ்சே! * கார்க்கடல் நீர் வேலை *
பொழில் அளந்த புள்ளூர்திச் செல்வன் ** - எழில் அளந்தங்கு
எண்ணற்கு அரியானை * எப்பொருட்கும் சேயானை *
நண்ணற்கு அரியானை நாம் 7

2289 நாமம் பல சொல்லி * நாராயணா என்று *
நாமங்கையால் தொழுதும் நன்னெஞ்சே! - வா ** மருவி
மண்ணுலகம் உண்டு உமிழ்ந்த * வண்டறையும் தண்துழாய் *
கண்ணனையே காண்க நங்கண் 8

2290 கண்ணும் கமலம் * கமலமே கைத்தலமும் *
மண்ணளந்த பாதமும் மற்றவையே ** - எண்ணில்
கருமா முகில் வண்ணன் * கார்க்கடல் நீர் வண்ணன் *
திருமாமணிவண்ணன் தேசு 9

2291 தேசும் திறலும் * திருவும் உருவமும் *
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும் - பேசில் **
வலம் புரிந்த வான்சங்கம் * கொண்டான் பேரோத *
நலம் புரிந்து சென்றடையும் நன்கு 10

2292 நன்கோதும் * நால் வேதத்துள்ளான் * நறவிரியும்
பொங்கோதருவிப் புனல் வண்ணன் ** - சங்கோதப்
பாற்கடலான் * பாம்பணையின் மேலான் * பயின்று உரைப்பார்
நூற்கடலான் நுண்ணறிவினான் 11

2293 அறிவென்னும் தாள் கொளுவி * ஐம்புலனும் தம்மில் *
செறிவென்னும் திண் கதவம் செம்மி ** - மறை என்றும்
நன்கோதி * நன்குணர்வார் காண்பரே * நாள் தோறும்
பைங்கோத வண்ணன் படி 12

2294 படிவட்டத் தாமரை * பண்டுலகம் நீர் ஏற்று *
அடிவட்டத்தால் அளப்ப நீண்ட - முடிவட்டம் **
ஆகாயம் ஊடறுத்து * அண்டம் போய் நீண்டதே *
மாகாயமாய் நின்ற மாற்கு 13

2295 மாற்பால் மனம் சுழிப்ப * மங்கையர் தோள் கை விட்டு *
நூற்பால் மனம் வைக்க நொய்விதாம் ** - நாற்பால
வேதத்தான் வேங்கடத்தான் * விண்ணோர் முடி தோயும் *
பாதத்தான் பாதம் பணிந்து 14

2296 பணிந்து உயர்ந்த பௌவப் * படுதிரைகள் மோத *
பணிந்த பணமணிகளாலே - அணிந்து ** அங்கு
அனந்தன் அணைக் * கிடக்கும் அம்மான் * அடியேன்
மனம் தன் அணைக் கிடக்கும் வந்து 15

2297 * வந்துதைத்த வெண்திரைகள் * செம்பவள வெண்முத்தம் *
அந்தி விளக்கும் அணி விளக்காம் ** - எந்தை
ஒருவல்லித் தாமரையாள் * ஒன்றிய சீர் மார்வன் *
திருவல்லிக்கேணியான் சென்று 16

2298 சென்ற நாள் செல்லாத * செங்கண் மால் எங்கள் மால் *
என்ற நாள் என்னாளும் நாளாகும் ** - என்றும்
இறவாத எந்தை * இணை அடிக்கே ஆளாய் *
மறவாது வாழ்த்துக என் வாய் 17

2299 வாய் மொழிந்து வாமனனாய் * மாவலி பால் * மூவடி மண்
நீ அளந்து கொண்ட நெடுமாலே! ** - தாவிய நின்
எஞ்சா இணை அடிக்கே * ஏழ் பிறப்பும் ஆளாகி *
அஞ்சாதிருக்க அருள் 18

2300 அருளாது ஒழியுமே? * ஆலிலை மேல் * அன்று
தெருளாத * பிள்ளையாய்ச் சேர்ந்தான் ** - இருளாத
சிந்தையராய்ச் சேவடிக்கே * செம்மலர் தூய்க் கை தொழுது *
முந்தையராய் நிற்பார்க்கு முன் 19

2301 முன் உலகம் * உண்டு உமிழ்ந்தாய்க்கு * அவ்வுலகம் ஈரடியால் *
பின் அளந்து கோடல் பெரிதொன்றே? ** - என்னே!
திருமாலே! * செங்கண் நெடியானே! * எங்கள்
பெருமானே! நீ இதனைப் பேசு 20

2302 பேசுவார் * எவ்வளவு பேசுவர் * அவ்வளவே
வாச மலர்த் துழாய் மாலையான் ** - தேசுடைய
சக்கரத்தான் * சங்கினான் சார்ங்கத்தான் * பொங்கரவ
வக்கரனைக் கொன்றான் வடிவு 21

2303 வடிவார் முடிகோட்டி * வானவர்கள் * நாளும்
கடியார் மலர் தூவிக் காணும் - படியானை **

செம்மையால் உள்ளுருகிச் * செவ்வனே நெஞ்சமே! *
மெய்ம்மையே காண விரும்பு 22

2304 விரும்பி விண் மண் அளந்த * அஞ்சிறைய வண்டார் *
சுரும்பு தொளையில் சென்றூத ** - அரும்பும்
புனந்துழாய் மாலையான் * பொன்னங்கழற்கே *
மனம் துழாய் மாலாய் வரும் 23

2305 வருங்கால் இருநிலனும் * மால் விசும்பும் காற்றும் *
நெருங்கு தீ நீர் உருவும் ஆனான் ** - பொருந்தும்
சுடராழி * ஒன்றுடையான் சூழ் கழலே * நாளும்
தொடராழி நெஞ்சே! தொழுது 24

2306 தொழுதால் பழுதுன்டே? * தூநீர் உலகம் *
முழுதுன்டு மொய்குழலாள் ஆய்ச்சி ** - விழுதுண்ட[3]
வாயானை * மால் விடை ஏழ் செற்றானை * வானவர்க்கும்
சேயானை நெஞ்சே! சிறந்து 25

2307 சிறந்த என் சிந்தையும் * செங்கண் அரவும் *
நிறைந்த சீர் நீள் கச்சி உள்ளும் ** - உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் * வேளுக்கைப் பாடியுமே *
தாம் கடவார் தண்துழாயார் 26

2308 ஆரே துயருழந்தார் * துன்புற்றாராண்டையார்? *
காரே மலிந்த கருங்கடலை ** - நேரே
கடைந்தானைக் * காரணனை நீரணை மேல் * பள்ளி
அடைந்தானை நாளும் அடைந்து 27

2309 அடைந்தது அரவணை மேல் * ஐவர்க்காய் * அன்று
மிடைந்தது * பாரத வெம்போர் ** - உடைந்ததுவும்
ஆய்ச்சி பால் மத்துக்கே * அம்மனே! வாள் எயிற்றுப் *
பேய்ச்சி பால் உண்ட பிரான் 28

2310 பேய்ச்சி பால் உண்ட * பெருமானைப் பேர்ந்தெடுத்து *
ஆய்ச்சி முலை கொடுத்தாள் அஞ்சாதே ** - வாய்த்த
இருளார் திருமேனி * இன்பவளச் செவ்வாய் *
தெருளா மொழியானைச் சேர்ந்து 29

2311 சேர்ந்த திருமால் * கடல் குடந்தை வேங்கடம் *
நேர்ந்த என் சிந்தை நிறை விசும்பும்[4] ** - வாய்ந்த

[3] இழுதுண்ட
[4] விசும்பு

மறை பாடகம் அனந்தன் * வண்துழாய்க் கண்ணி *
இறை பாடியாய இவை 30

2312 இவையவன் கோயில் * இரணியனது ஆகம் *
அவை செய்து அரி உருவம் ஆனான் ** - செவி தெரியா
நாகத்தான் * நால் வேதத்து உள்ளான் * நறவேற்றான்
பாகத்தான் பாற்கடல் உளான் 31

2313 பாற்கடலும் வேங்கடமும் * பாம்பும் பனிவிசும்பும் *
நூற்கடலும் நுண்ணூல தாமரை மேல் ** - பாற்பட்டு
இருந்தார் மனமும் * இடமாகக் கொண்டான் *
குருந்தொசித்த கோபாலகன் 32

2314 பாலகனாய் * ஆலிலை மேல் பைய * உலகெல்லாம்
மேல் ஒரு நாள் * உண்டவனே! மெய்ம்மையே ** - மாலவனே!
மந்தரத்தால் * மாநீர்க் கடல் கடைந்து * வானமுதம்
அந்தரத்தார்க்கு ஈந்தாய் நீ அன்று 33

2315 அன்று இவ்வுலகம் * அளந்த அசைவே கொல்? *
நின்று இருந்து வேளுக்கை நீள்நகர்வாய் ** - அன்று
கிடந்தானைக் * கேடில் சீரானை * முன் கஞ்சைக்
கடந்தானை நெஞ்சமே! காண் 34

2316 காண் காண் என * விரும்பும் கண்கள் * கதிரிலகு
பூண்தார் * அகலத்தான் பொன்மேனி ** - பாண்கண்
தொழில் பாடி * வண்டறையும் தொங்கலான் * செம்பொன்
கழல் பாடி யாம் தொழுதும் கை 35

2317 கைய கனலாழி * கார்க்கடல்வாய் வெண்சங்கம் *
வெய்ய கதை சார்ங்கம் வெஞ்சுடர்வாள் ** - செய்ய
படை பரவை பாழி * பனி நீருலகம் *
அடி அளந்த மாயர் அவர்க்கு[5] 36

2318 அவற்கு அடிமைப்பட்டேன் * அகத்தான் புறத்தான் *
உவர்க்கும் கருங்கடல் நீர் உள்ளான் ** - துவர்க்கும்
பவளவாய்ப் பூமகளும் * பன்மணிப் பூணாரம் *
திகழும் திருமார்பன் தான் 37

2319 தானே தனக்கு உவமன் * தன் உருவே எவ்வுருவும் *
தானே தவவுருவும் தாரகையும் ** - தானே
எரி சுடரும் மால் வரையும் * எண்திசையும் * அண்டத்து

---

[5] மாயன் அவற்கு

இருசுடரும் ஆய இறை 38

2320 இறையாய் நிலனாகி * எண்திசையும் தானாய் *
மறையாய் மறைப் பொருளாய் வானாய் ** - பிறை வாய்ந்த
வெள்ளத்தருவி * விளங்கொலி நீர் வேங்கடத்தான் *
உள்ளத்தின் உள்ளே உளன் 39

2321 உளன் கண்டாய் நல்நெஞ்சே! * உத்தமன் என்றும்
உளன் கண்டாய் * உள்ளுவார் உள்ளத்து - உளன் கண்டாய் **
விண்ணொடுங்கக் கோடுயரும் * வீங்கருவி வேங்கடத்தான் *
மண்ணொடுங்கத் தான் அளந்த மன் 40

2322 மன்னு மணி முடி நீண்டு * அண்டம் போய் எண்திசையும் *
துன்னு பொழில் அனைத்தும் சூழ் கழலே ** - மின்னை
உடையாகக் கொண்டு * அன்று உலகளந்தான் * குன்றம்
குடையாக ஆ காத்த கோ 41

2323 கோவலனாய் * ஆநிரைகள் மேய்த்துக் குழல் ஊதி *
மாவலனாய்க் கீண்ட மணிவண்ணன் ** - மேவி
அரி[6] உருவம் ஆகி * இரணியனது ஆகம் *
தெரியுகிரால் கீண்டான் சினம் 42

2324 சினமா மத களிற்றின் * திண்மருப்பைச் சாய்த்து *
புனமேய பூமி அதனை ** - தனமாகப்
பேரகலத்து உள்ளொடுக்கும் * பேரார மார்வனார் *
ஓரகலத்து உள்ளது உலகு 43

2325 உலகமும் * ஊழியும் ஆழியும் * ஒண்கேழ்
அலர் கதிரும் * செந்தீயும் ஆவான் ** - பல கதிர்கள்
பாரித்த * பைம்பொன் முடியான் அடி இணைக்கே *
பூரித்து என் நெஞ்சே! புரி 44

2326 புரிந்து மத வேழம் * மாப்பிடியோடு ஊடி *
திரிந்து சினத்தால் பொருது ** - விரிந்த சீர்
வெண்கோட்டு * முத்துதிர்க்கும் வேங்கடமே * மேலொரு நாள்
மண்கோட்டுக் கொண்டான் மலை 45

2327 மலை முகடு மேல் வைத்து * வாசுகியைச் சுற்றி *
தலை முகடு தான் ஒரு கை பற்றி ** - அலை முகட்டு
அண்டம் போய் நீர் தெறிப்ப * அன்று கடல் கடைந்தான் *
பிண்டமாய் நின்ற பிரான் 46

[6] எரி

2328 நின்ற பெருமானே! நீர் ஏற்று * உலகெல்லாம்
சென்ற பெருமானே! * செங்கண்ணா! ** - அன்று
துரகவாய் கீண்ட * துழாய் முடியாய்! * நங்கள்
நரகவாய் கீண்டாயும் நீ 47

2329 நீயன்றே நீர் ஏற்று * உலகம் அடி அளந்தாய்? *
நீயன்றே நின்று நிரை மேய்த்தாய்? ** - நீயன்றே
மாவாயுரம் பிளந்து * மாமருதினூடு போய் *
தேவாசுரம் பொருதாய் செற்று? 48

2330 செற்றதுவும் * சேரா இரணியனை * சென்றேற்றுப்
பெற்றதுவும் * மாநிலம் பின்னைக்காய் ** - முற்றல்
முரியேற்றின் * முன்னின்று மொய்ம்பொழித்தாய்! * மூரிச்
சுரியேறு சங்கினாய்! சூழ்ந்து 49

2331 சூழ்ந்த துழாய் அலங்கல் * சோதி மணி முடி மால் *
தாழ்ந்த அருவித் தடவரைவாய் ** - ஆழ்ந்த
மணி நீர்ச் சுனை வளர்ந்த * மாமுதலை கொன்றான் *
அணி நீல வண்ணத்தவன் 50

2332 அவனே அருவரையால் * ஆநிரைகள் காத்தான் *
அவனே அணி மருதம் சாய்த்தான் ** - அவனே
கலங்காப் பெருநகரம் * காட்டுவான் கண்டீர் *
இலங்காபுரம் எரித்தான் எய்து 51

2333 எய்தான் மராமரம் * ஏழும் இராமனாய் *
எய்தான் அம்மான் மறியை[7] ஏந்திழைக்காய் ** - எய்ததுவும்
தென்னிலங்கைக் கோன் வீழ * சென்று குறள் உருவாய் *
முன்னிலங்கைக் கொண்டான் முயன்று 52

2334 முயன்று தொழு நெஞ்சே! * மூரி நீர் வேலை *
இயன்றமரத்து ஆலிலையின் மேலால் ** - பயின்றங்கோர்
மண்ணலங்கொள் வெள்ளத்து * மாயக் குழவியாய் *
தண்ணலங்கல் மாலையான் தாள் 53

2335 தாளால் சகடம் * உதைத்துப் பகடுந்தி *
கீளா மருதிடை போய்க் கேழலாய் ** - மீளாது
மண்ணகலம் கீண்டு * அங்கோர் மாதுகந்த மார்வற்கு *
பெண்ணகலம் காதல் பெரிது 54

2336 பெரிய வரை மார்பில் * பேராரம் பூண்டு *

[7] மரிய

கரிய முகிலிடை மின் போல ** - தெரியுங்கால்[8]
பாணொடுங்க * வண்டறையும் பங்கயமே * மற்றவன் தன்
நீள் நெடுங்கண் காட்டும் நிறம் 55

2337 நிறம் வெளிது செய்து * பசிது கரிதென்று *
இறை உருவம் யாம் அறியோம் எண்ணில் ** - நிறைவுடைய[9]
நாமங்கை தானும் * நலம் புகழ வல்லளே? *
பூமங்கை கேள்வன் பொலிவு 56

2338 பொலிந்திருண்ட கார்வானில் * மின்னே போல் தோன்றி *
மலிந்து திருவிருந்த மார்வன் ** - பொலிந்த[10]
கருடன் மேல் கொண்ட * கரியான் கழலே *
தெருடன் மேல் கண்டாய் தெளி 57

2339 தெளிந்த சிலாதலத்தின் * மேல் இருந்த மந்தி *
அளிந்த கடுவனையே நோக்கி ** - விளங்கிய
வெண்மதியம் * தாவென்னும் வேங்கடமே * மேலொரு நாள்
மண்மதியில் கொண்டுகந்தான் வாழ்வு 58

2340 வாழும் வகை அறிந்தேன் * மை போல் நெடுவரைவாய் *
தாழும் அருவி போல் தார் கிடப்ப ** - சூழும்
திருமாமணிவண்ணன் * செங்கண்மால் * எங்கள்
பெருமான் அடி சேரப் பெற்று 59

2341 பெற்றம் பிணை மருதம் * பேய்முலை மாச்சகடம் *
முற்றக்காத்தூடு போய் உண்டுதைத்து ** - கற்றுக்
குணிலை * விளங்கனிக்குக் கொண்டு எறிந்தான் * வெற்றிப்
பணிலம் வாய் வைத்து உகந்தான் பண்டு 60

2342 * பண்டெல்லாம் வேங்கடம் * பாற்கடல் வைகுந்தம் *
கொன்டங்கு உறைவார்க்குக் கோயில் போல் ** - வண்டு
வளங்கிளரும் நீள்சோலை * வண்பூங்கடிகை *
இளங்குமரன் தன் விண்ணகர் 61

2343 விண்ணகரம் வெஃகா * விரிதிரைநீர் வேங்கடம் *
மண்ணகரம் மாமாட வேளுக்கை ** - மண்ணகத்த
தென் குடந்தை * தேனார் திருவரங்கம் தென்கோட்டி *
தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு 62

---

[8] திரியுங்கால்
[9] நிறமுடைய
[10] பொலிந்து

2344 தாழ் சடையும் நீள்முடியும் * ஒண்மழுவும் சக்கரமும் *
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் ** - சூழும்
திரண்டருவி பாயும் * திருமலை மேல் எந்தைக்கு *
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து 63

2345 இசைந்த அரவமும் * வெற்பும் கடலும் *
பசைந்தங்கமுது படுப்ப[11] ** - அசைந்து
கடைந்த வருத்தமோ? * கச்சி வெஃகாவில் *
கிடந்து இருந்து நின்றதுவும் அங்கு? 64

2346 அங்கற்கிடரின்றி[12] * அந்திப் பொழுதத்து *
மங்க இரணியனது ஆகத்தை ** - பொங்கி
அரி உருவமாய்ப் பிளந்த * அம்மானவனே *
கரி உருவம் கொம்பொசித்தான் காய்ந்து 65

2347 காய்ந்திருளை மாற்றிக் * கதிரிலகு மாமணிகள் *
ஏய்ந்த பணக்கதிர் மேல் வெவ்வுயிர்ப்ப ** - வாய்ந்த
மது கைடவரும் * வயிறுருகி மாண்டார் *
அது கேடவர்க்கு இறுதியாங்கு 66

2348 ஆங்கு மலரும் * குவியுமாலுந்திவாய் *
ஓங்கு கமலத்தின் ஒண்போது[13] ** - ஆங்கைத்
திகிரி சுடர் என்றும் * வெண்சங்கம் * வானில்
பகரு மதியென்றும் பார்த்து 67

2349 பார்த்த கடுவன் * சுனை நீர் நிழல் கண்டு *
பேர்த்தோர் கடுவன் எனப் பேர்ந்து ** - கார்த்த
களங்கனிக்குக் * கை நீட்டும் வேங்கடமே * மேல் நாள்
விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு 68

2350 வெற்பென்று * வேங்கடம் பாடும் * வியந்துழாய்
கற்பென்று சூடும் * கருங்குழல் மேல் ** - மல் பொன்ற
நீண்ட தோள் மால் கிடந்த * நீள் கடல் நீராடுவான் *
பூண்ட நாள் எல்லாம் புகும் 69

2351 புகுமதத்தால் * வாய் பூசிக் கீழ் தாழ்ந்து * அருவி
உகு மதத்தால் * கால் கழுவிக் கையால் ** - மிகு மதத் தேன்
விண்ட மலர் கொண்டு * விறல் வேங்கடவனையே *
கண்டு வணங்கும் களிறு 70

[11] படைப்ப
[12] அங்கக்கிடறின்றி
[13] கமலத்தினதொண்போது

2352 களிறு முகில் குத்தக் * கை எடுத்தோடி *
ஒளிறு மருப்பொசிகை யாளி - பிளிறி
விழ ** கொன்று நின்றதிரும் * வேங்கடமே * மேல் நாள்
குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று 71

2353 குன்று ஒன்றினாய * குறமகளிர் கோல்வளைக் கை *
சென்று விளையாடும் தீங்கழை போய் ** - வென்று
விளங்கு மதி கோள் விடுக்கும் * வேங்கடமே * மேலை
இளங்குமரர் கோமான் இடம் 72

2354 இடம் வலம் ஏழ் பூண்ட * இரவித் தேர் ஓட்டி *
வடமுக வேங்கடத்து மன்னும் ** - குடம் நயந்த
கூத்தனாய் நின்றான் * குரைகழலே கூறுவதே *
நாத்தன்னால் உள்ள நலம் 73

2355 நலமே வலிது கொல்? * நஞ்சூட்டுவன் பேய் *
நிலமே புரண்டு போய் வீழ ** - சலமே தான்
வெங்கொங்கை உண்டானை * மீட்டாய்ச்சி ஊட்டுவான் *
தன் கொங்கை வாய் வைத்தாள் சார்ந்து 74

2356 சார்ந்தகடு தேய்ப்பத் * தடாவிய கோட்டுச்சி வாய் *
ஊர்ந்தியங்கும் வெண்மதியின் ஒண்முயலை ** - சேர்ந்து
சினவேங்கை பார்க்கும் * திருமலையே * ஆயன்
புனவேங்கை நாறும் பொருப்பு 75

2357 பொருப்பிடையே நின்றும் * புனல் குளித்தும் * ஐந்து
நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா ** - விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை * மெய்ம்மலர்[14] தூய்க் கை தொழுதால் *
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து 76

2358 ஆய்ந்த அருமறையோன் * நான்முகத்தோன் நன்குறங்கில் *
வாய்ந்த குழவியாய் வாள் அரக்கன் ** - ஏய்ந்த
முடிப்போது * மூன்றேழ் என்றெண்ணினான் * ஆர்ந்த
அடிப்போது நங்கட்கு அரண் 77

2359 அரணாம் நமக்கு என்றும் * ஆழி வலவன் *
முரணாள் வலம் சுழிந்த[15] மொய்ம்பன் ** - சரணா மேல்
ஏது கதி? ஏது நிலை? * ஏது பிறப்பு? என்னாதே *
ஓது கதி மாயனையே[16] ஓர்த்து 78

[14] மென்மலர்
[15] சுழித்த
[16] மாதவனையே

2360 ஓர்த்த மனத்தராய் * ஐந்தடக்கி ஆராய்ந்து *
பேர்த்தால் பிறப்பேழும் பேர்க்கலாம் ** - கார்த்த
விரையார் நறுந்துழாய் * வீங்கோத மேனி *
நிரையார மார்வனையே நின்று 79

2361 நின்று எதிராய * நிரைமணித்தேர் வாணன் தோள் *
ஒன்றிய ஈரைஞ்ஞூறு உடன் துணிய ** - வென்றிலங்கும்
ஆர் படுவான் * நேமி அரவணையான் * சேவடிக்கே
நேர் படுவான் தான் முயலும் நெஞ்சு 80

2362 நெஞ்சால் * நினைப்பரியனேலும் * நிலைப் பெற்று என்
நெஞ்சமே! பேசாய் * நினைக்குங்கால் ** - நெஞ்சத்துப்
பேராது நிற்கும் * பெருமானை என் கொலோ? *
ஓராது நிற்பது உணர்வு 81

2363 உணரில் உணர்வரியன் * உள்ளம் புகுந்து *
புணரிலும் காண்பரியன் உண்மை ** - இணரணையக்
கொங்கணைந்து வண்டறையும் * தண்துழாய்க் கோமானை *
எங்கணைந்து காண்டும் இனி? 82

2364 இனியவன் மாயன் * என உரைப்பரேலும் *
இனியவன் காண்பரியனேலும் ** - இனியவன்
கள்ளத்தால் மண் கொண்டு * விண் கடந்த பைங்கழலான் *
உள்ளத்தின் உள்ளே உளன் 83

2365 உளனாய * நான்மறையின் உட்பொருளை * உள்ளத்து
உளனாகத் * தேர்ந்து உணர்வரேலும் ** - உளனாய
வண்தாமரை நெடுங்கண் * மாயவனை யாவரே? *
கண்டார் உகப்பர் கவி 84

2366 கவியினார் கைபுனைந்து * கண்ணார் கழல் போய் *
செவியினார் கேள்வியராய்ச் சேர்ந்தார் ** - புவியினார்
போற்றி உரைக்கப் * பொலியுமே? * பின்னைக்கா
ஏற்றுயிரை அட்டான் எழில் 85

2367 எழில் கொண்டு[17] * மின்னுக்கொடி எடுத்து * வேகத்
தொழில் கொண்டு * தான் முழங்கித் தோன்றும் ** - எழில் கொண்ட
நீர் மேக மன்ன * நெடுமால் நிறம் போல *
கார் வானம் காட்டும் கலந்து 86

2368 கலந்து மணி இமைக்கும் கண்ணா! * நின் மேனி

---

[17] கொண்ட

மலர்ந்து * மரதகமே காட்டும் ** - நலந்திகழும்
கொந்தின்வாய் வண்டறையும் * தண்துழாய்க் கோமானை *
அந்தி வான் காட்டும் அது 87

2369 அது நன்று இது தீதென்று * ஐயப்படாதே *
மது நின்ற தண்துழாய் மார்வன் ** - பொது நின்ற *
பொன்னங்கழலே தொழுமின் * முழு வினைகள்
முன்னம் கழலும் முடிந்து 88

2370 முடிந்த பொழுதில் குறவாணர் * ஏனம்
படிந்துழுசால் * பைந்தினைகள்வித்த ** - தடிந்தெழுந்த
வேய்ங்கழை போய் * விண் திறக்கும் வேங்கடமே * மேலொரு நாள்
தீங்குழல் வாய் வைத்தான் சிலம்பு 89

2371 சிலம்பும் செறிகழலும் * சென்றிசைப்ப * விண்ணாறு
அலம்பிய சேவடி போய் ** அண்டம் - புலம்பிய தோள்
எண்திசையும் சூழ * இடம் போதாது என் கொலோ? *
வண்டுழாய் மால் அளந்த மண் 90

2372 மண் உண்டும் * பேய்ச்சி முலை உண்டும் ஆற்றாதாய் *
வெண்ணெய் விழுங்க வெகுண்டு ** ஆய்ச்சி - கண்ணிக்
கயிற்றினால் கட்டத் * தான் கட்டுண்டு இருந்தான் *
வயிற்றினோடு ஆற்றா மகன் 91

2373 மகன் ஒருவர்க்கு அல்லாத * மாமேனி மாயன் *
மகனாம் அவன் மகன் தன் காதல் - மகனை **
சிறை செய்த வாணன் தோள் * செற்றான் கழலே *
நிறை செய்து என் நெஞ்சே! நினை 92

2374 நினைத்து உலகில் ஆர் தெளிவார்? * நீண்ட திருமால் *
அனைத்துலகும் உள் ஒடுக்கி ஆல் மேல் ** - கனைத்துலவு
வெள்ளத்தோர் பிள்ளையாய் * மெள்ளத் துயின்றானை *
உள்ளத்தே வை நெஞ்சே! உய்த்து 93

2375 உய்த்து உணர்வென்னும் * ஒளி கொள் விளக்கேற்றி *
வைத்து அவனை நாடி வலைப்படுத்தேன் ** - மெத்தெனவே
நின்றான் இருந்தான் * கிடந்தான் என் நெஞ்சத்து *
பொன்றாமை மாயன் புகுந்து 94

2376 புகுந்து இலங்கும் * அந்திப் பொழுதத்து * அரியாய்
இகழ்ந்த * இரணியனது ஆகம் ** - சுகிர்ந்தெங்கும்
சிந்தப் பிளந்த * திருமால் திருவடியே *
வந்தித்து என் நெஞ்சமே! வாழ்த்து 95

2377 வாழ்த்திய வாயராய் * வானோர் மணிமகுடம் *
தாழ்த்தி வணங்கத் தழும்பாமே ** - கேழ்த்த
அடித் தாமரை * மலர் மேல் மங்கை மணாளன் *
அடித் தாமரையாமலர் 96

2378 அலர் எடுத்த உந்தியான் * ஆங்கு எழிலாய *
மலர் எடுத்த மாமேனி மாயன் ** - அலர் எடுத்த
வண்ணத்தான் * மாமலரான் வார் சடையான் * என்றிவர்கட்கு
எண்ணத் தான் ஆமோ? இமை 97

2379 இமம் சூழ் மலையும் * இருவிசும்பும் காற்றும் *
அமஞ்சூழ்ந்தற விளங்கித் தோன்றும் ** - நமன் சூழ்
நரகத்து * நம்மை நணுகாமல் காப்பான் *
துரகத்தை வாய் பிளந்தான் தொட்டு 98

2380 * தொட்ட படை எட்டும் * தோலாத வென்றியான் *
அட்டபுயகரத்தான் அஞ்ஞான்று ** - குட்டத்துக்
கோள் முதலை துஞ்சக் * குறித்தெறிந்த சக்கரத்தான் *
தாள் முதலே நங்கட்குச் சார்வு 99

2381 * சார்வு நமக்கென்றும் சக்கரத்தான் * தண்துழாய்த்
தார்வாழ் * வரை மார்பன் தான் முயங்கும் ** - காரார்ந்த
வானமருமின்னிமைக்கும் * வண்தாமரை நெடுங்கண் *
தேனமரும் பூ மேல் திரு 100

**தசக அடிவரவு:** திரு நன்கு பேசுவார் இவை மன்னும் அவனே
பண்டு களிறு நெஞ்சால் மண்ணுண்டும் நான்முகன்

---

**பேயாழ்வார் திருவடிகளே சரணம்**